சார்பு நீதிமன்றம், திருவாரூர்.

முன்னிலை திரு. C. ராஜேஷ், B.A., B.L.,

சார்பு நீதிபதி, திருவாரூர்.

**MCOP.No.02/2020**

மனுதாரர் தரப்பு சாட்சி ம.சா.1ன் வாக்குமூலம் 1875 ம் ஆண்டில் 10 வது பிரிவின் கீழ் விசாரிக்கப்பட்டு திரு. P. செந்தில்குமார், பெஞ்ச் கிளார்க் நிலை 2 என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் வாங்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| பெயர்: | திரு. குபேஸ் (எ) புபேஸ்குப்தா | த/பெ: சீனிவாசன் |
| வயது: | | ஊர் : |
| தொழில்: | | முகவரி: |
| தேதி: | 17.07.2026 | தாலுக்கா : |

**முதல் விசாரணை...**

இம்மனுவில் மனுதாரர் ஆவேன். நான் என் முதல் விசாரணையை எழுத்து மூலமாக முதல் நிலை நிரூபண பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் சொல்லப்பட்ட விபரங்கள் எனக்கு நன்கு தெரியும் அதிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான்.

| வ. எண் | நாள் | ஆவணவிபரம் | ஆவணத் தன்மை | |
|---|---|---|---|---|
| 1 | -- | முதல்தகவல் அறிக்கை | நகல் | ம.சா.ஆ.1 |
| 2 | -- | திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் கொடுத்த மெடிக்கோ லீகல் ஒப்பினியன் | நகல் | ம.சா.ஆ.2 |
| 3 | -- | திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் கொடுத்த விடுவிப்பு சான்று | அசல் | ம.சா.ஆ.3 |
| 4 | -- | 1 ஆம் எதிர்மனுதாரர் வாகனத்தின் பதிவு சான்று | நகல் | ம.சா.ஆ.4 |

| | | | | |
|---|---|---|---|---|
| 5 | -- | 1 ஆம் எதிர்மனுதாரர் வாகனத்தின்காப்பீடு சான்று | நகல் | ம.சா.ஆ.5 |
| 6 | | 1 ஆம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநரின் ஓட்டுநர்உரிமம் | நகல் | ம.சா.ஆ.6 |
| 7 | | எனது ஆதார் அடையாள அட்டை | நகல் | ம.சா.ஆ.7 |

மனுப்படி உத்தரவாக வேண்டுகிறேன்.

**2 ஆம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

1. எனது வயது, வருமானம், தொழில் குறித்த ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது ஓட்டுநர் உரிமத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் அது தொலைந்துவிட்டது. நான் ஓட்டுநர் தொழில் செய்துவரவில்லை என்றும் எனக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றும் ஓட்டுநர் உரிமம் தொலைந்துவிட்டதாக மனுவிற்காக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

2. எனக்கு முன்னால் பிக்கப் வேன் சென்று கொண்டிருந்தது, நான் பின்னால் சென்றேன். முன்னால் சென்ற வண்டி திரும்பும் போது நான்தான் கவனமில்லாமல் வாகனத்தை இயக்கி விபத்தை ஏற்படுத்தினேன் என்றால் சரியல்ல. நான் ஓட்டிச்சென்ற இருசக்கர வாகனத்தின் காப்பீடு நிறுவனத்தை தரப்பினராக சேர்க்கவில்லைஎன்றால் சரிதான். எனது வாகனத்தின் காப்பீட்டு சான்றை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்தில் எனக்கும் பகர பொறுப்பு உள்ளது என்றும் அதனால் இரண்டாம் எதிர்மனுதாரர் மட்டும் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. நான்கேட்டுள்ள இழப்பீடு அதிகம் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை**

Typed down to my dictation, In my presence and hearing and under my personnel direction and Superintendence and admitted by the witness to be Correct.

C RAJESH
Digitally signed by C RAJESH
Date: 2026.07.18 17:11:10 +0530

Subordinate Judge,
Tiruvarur.